A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.
-Mahatma Gandhi

**TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN**
4th Floor, SIDCO Corporate Office Building,Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email : tneochennai@gmail.com Web site : www.tnerc.tn.gov.in

**முன்னிலை: திரு. ந. கண்ணன், மின்குறைதீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 14 / 2025**

திரு V. குப்புசாமி,
செங்குந்த நகர் முதல் கிராஸ்,
கொங்குநகர், வெங்கமேடு,
மண்மங்கலம் வட்டம், கரூர்.

………மேல்முறையீட்டாளர்
(திரு V. குப்புசாமி)

எதிர்

1. செயற்பொறியாளர்/ இ.கா/ நகரியம்/கரூர்,
கரூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் லிமிடெட்,
TNEB வளாகம், 3, கோவை ரோடு, கரூர் – 639002.

2. உதவி செயற்பொறியாளர்/ வடக்கு/கரூர்,
கரூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் லிமிடெட்,
SIDCO தொழிற்பேட்டை, மண்மங்கலம், கரூர் – 639 006.

3. உதவி மின்பொறியாளர்/ இ.கா /வெங்கமேடு,
கரூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் லிமிடெட்,
50 அடி சாலை, வெங்கமேடு, கரூர் – 639 006.

. .. . எதிர்மனுதாரர்கள்
(திருமதி S. தணிகைமார்தாள், செயற்பொறியாளர்/ இ.கா/ நகரியம்/கரூர்
திரு S. சுரேஷ், உதவி மின்பொறியாளர்/ இ.கா /வெங்கமேடு)

**மனு பெறப்பட்ட நாள்: 14-02-2025**

**கேட்புரை நாள்: 08-04-2025**

**ஆணை நாள்: 15-04-2025**

14.02.2025 அன்று பெறப்பட்ட திரு V. குப்புசாமி, செங்குந்த நகர் முதல் கிராஸ், கொங்குநகர், வெங்கமேடு, மண்மங்கலம் வட்டம், கரூர் மாவட்டம் அவர்களின் மனு

மேல்முறையீட்டு மனு எண் 14/2025 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 08.04.2025 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

### 1. மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:

மேல்முறையீட்டாளர் தனது மின் இணைப்பு எண் 06-004-003-1678 தொடர்பாக 03/2023 மாதத்திற்காக சராசரி கணக்கீட்டின் அடிப்படையில் விதிக்கப்பட்ட ரூ.78,642/- தொகையை தள்ளுபடி செய்ய வேண்டும் என விண்ணப்பித்துள்ளார்.

### 2.0 வழக்கின் சுருக்கம்:

2.1 மேல்முறையீட்டாளர் தனது மின் இணைப்பு எண் 06-004-003-1678 தொடர்பாக 03/2023 மாதத்திற்காக சராசரி கணக்கீட்டின் அடிப்படையில் விதிக்கப்பட்ட ரூ.78,642/- தொகையை தள்ளுபடி செய்ய வேண்டும் என விண்ணப்பித்துள்ளார்.

2.2 03/2023 மாதத்திற்கான விடுபட்ட சராசரி மின் கட்டண தொகை வாரிய விதிமுறைப்படி தான் தணிக்கைத் துறையினரால் விதிக்கப்பட்டுள்ளது என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

2.3 எதிர்மனுதாரரின் பதிலில் திருப்தி இல்லாததால் மேல்முறையீட்டாளர் கரூர் மின் பகிர்மான வட்டம், மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தை 28.08.2024 அன்று அணுகியுள்ளார்.

2.4 மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், கரூர் மின் பகிர்மான வட்டம் 15.10.2024 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில் அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

3.0 **மன்றத்தின் தீர்வு :**

3.1 கரூர் மின் பகிர்மான வட்டம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 15.10.2024 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"மன்றத்தின் தீர்வு:*

*மனுதாரர், திரு V.குப்புசாமி, அவர்கள் வெங்கமேடு பிரிவிற்குட்பட்ட மனுதாரருடைய மின்இணைப்பில், (மின்இணைப்பு எண்.06-004-003-1678, TFV) Indus Tower செயல்பட்டு வந்ததாகவும். அதில் பொருத்தப்பட்டிருந்த மின்னளவி கடந்த 05/2023 அன்று பழுதின் காரணமாக மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பது கணினி பதிவேட்டின் மூலம் அறிய வருகிறது. அதன் அடிப்படையில் பிரிவு அலுவலகத்தில் வாரிய விதிமுறையின் TNERC Supply code clause 11 (2) சராசரி எடுக்கப்பட்டு குறைந்த கட்டணம் செலுத்தப்பட்ட பின்னிட்ட காலங்களுக்கும் கணக்கீட்டுத் தொகை வசூல் செய்யப்பட வேண்டும். ஆனால், பிரிவு அலுவலகத்தில் 05/2023 ஆம் மாதத்திற்கு மட்டும் சராசரி வகுக்கப்பட்டு மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது என்பதும் கணினி பதிவேட்டின் மூலம் தெரிய வருகிறது. கரூர் மின்வாரிய தணிக்கைத்துறை அலுவலர்களால் 04/2022 முதல் 03/2023 வரையிலான காலங்களில் பழுதான மின்அளவிகளின் சராசரி சரி பார்க்கும் பொழுது மனுதாரருடைய மின்இணைப்பும் ஆய்வு மேற்கொண்டு சரி பார்க்கப்பட்டு வாரிய விதிமுறையின் படி விடுபட்ட 03/2023 -ஆம் மாதத்திற்கான சராசரி தொகையாக ரூ.78,642/- ஐ செலுத்தக்கோரி தணிக்கை சீட்டு வழங்கப்பட்டுள்ளது.*

*மனுதாரர், மனுவில் மேற்குறிப்பிட்டுள்ள மின்இணைப்பு பொருத்தப்பட்ட கட்டிடத்தில் Indus Tower 11.03.2013 முதல் 10.03.2023 வரை ஒப்பந்தம் போடப்பட்டு இயங்கி வந்ததாகவும், மேற்படி இடத்தை 10.03.2023 அன்று காலி செய்துவிட்டு வேறு இடத்தில் இயங்கி வருவதாக மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்குண்டான ஒப்பந்த பத்திரம் மனுவில் இணைக்கப்பட்டுள்ளது. அதன் படி பார்க்கும் பொழுது Indus Tower மனுதாரர் குறிப்பிட்டுள்ளவாறு 03/2023 -ஆம் மாதத்தில் இடமாற்றம் செய்திருக்க வேண்டும். மேற்படி மின்இணைப்பின் உரிமையாளரால் மேற்குறிப்பிட்டுள்ள நிறுவனம் இட மாற்றம் செய்த உடன், பிரிவு அலுவலகத்தை நாடி நிறுவனம் இடம் மாற்றம் செய்யப்பட்டதை தெரிவிக்கப்பட்டிருந்தால் பிரிவு அலுவலரால் மின்இணைப்பு ஆய்வு செய்யப்பட்டு Check Reading போடப்பட்டிருக்கும். ஆனால், மனுதாரரால் எந்த ஒரு தகவலும் பிரிவு அலுவலகத்தில் தெரிவிக்கப்படவில்லை. எனவே, எந்த ஒரு முகாந்திரமும் தெரிவிக்கப்படாத காரணத்தால் 05/2023-ஆம் மாதம் மிள்னளவி பழுது ஏற்பட்டு அதன் பொருட்டு, மின்னளவி மாற்றம் செய்யப்பட்டு அதற்குரிய சராசரி தொகையும் விதிக்கப்பட்டுள்ளது.*

*(TNERC Supply code clause 11 (2) – ன்படி தணிக்கைத் துறையினரால் விதிக்கப்பட்ட சராசரி தொகை சரியானதாக கருதி மனுதாரர் தொகையை செலுத்துமாறு இம்மன்றத்தால் தீர்வு வழங்கப்படுகிறது. அந்த தொகையை வசூல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு செயற்பொறியாளர்/இ.கா/கரூர் அவர்களை அறிவுறுத்தப்படுகிறது."*

## 4.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>:

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 08.04.2025 அன்று காணொலி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் திரு V. குப்புசாமி அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.3 எதிர்மனுதாரர்கள் திருமதி S. தணிகைமார்தாள், செயற்பொறியாளர்/ இ.கா/ நகரியம்/கரூர் மற்றும் திரு S. சுரேஷ், உதவி மின்பொறியாளர்/ இ.கா /வெங்கமேடு, கரூர் மின் பகிர்மான வட்டம் ஆகியோர் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தங்களுடைய வாதங்களை எடுத்துரைத்தனர்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகளில் இம்முறையீட்டு மனுவிற்கு சம்பந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்பந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

## 5.0 <u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்</u>:

5.1 தனக்கு சொந்தமான மின் இணைப்பு எண் 06-004-003-1678 TF V ற்கு கடித வாயிலாக மீட்டர் பழுதடைந்திருக்கும் என்று கருதி 03/2023 மாதத்திற்கு ரூ.78,642/- செலுத்த அறிவிப்பு வழங்கப்பட்டதாகவும், மேற்படித் தொகை சம்பந்தமாக விபரமான விளக்கம் தந்து தொகையை தள்ளுபடி செய்ய கரூர் மின் பகிர்மான வட்டம், மின் நுகர்வோர் குறை தீர்க்கும் மன்றத்தை நாடி தொகையை தள்ளுபடி செய்ய மனு சமர்பித்ததாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.2 மேற்படி குறைதீர்க்கும் மன்றத்தில் அதன் பொருள் குறித்து 15/10/2024 அன்று விசாரணையில் விவாதித்து பரிசீலிக்கப்பட்டு கீழ் குறிப்பிட்ட ஆணை பிறப்பிக்கப்பட்டதாகவும், மேற்படி 15/10/2024 நாளிட்ட தீர்ப்புரை கடந்த 12/11/2024 அன்று தான் தனக்கு கிடைத்ததாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.3 INDUS TOWER மனுதாரர் குறிப்பிட்டுள்ளவாறு 03/2023 மாதத்தில் ஒப்பந்த படி இடமாற்றம் செய்திருக்க வேண்டும் எனவும் மின் இணைப்பின் உரிமையாளரால் மேற் குறிப்பிட்டுள்ள நிறுவனம் இடமாற்றம் செய்த உடன் பிரிவு அலுவலகத்தை நாடி நிறுவனம் இடம் மாற்றம் செய்யப்பட்டதை தெரிவிக்கப்பட்டிருந்தால் பிரிவு அலுவலரால் மின் இணைப்பு ஆய்வு செய்யப்பட்டு Check Reading போடப்பட்டிருக்கும் ஆனால் மனுதாரரால் எந்த ஒரு தகவலும் பிரிவு அலுவலகத்தில் தெரிவிக்கப்படவில்லை எனவே எந்த ஒரு முகாந்திரமும் தெரிவிக்கப்படாத காரணத்தினால் 05/2023 ஆம் மாதம் மின்னளவி பழுது ஏற்பட்டு அதன் பொருட்டு, மின்னளவி மாற்றம் செய்யப்பட்டு அதற்குரிய சராசரி தொகை விதிக்கப்பட்டுள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.4 TNERC Supply Code Clause 11 (2) ன் படி தணிக்கைத் துறையினரால் விதிக்கப்பட்ட சராசரி தொகை சரியானதாக கருதி மனுதாரர் தொகையை செலுத்துமாறு இம்மன்றத்தால் தீர்வு வழங்கப்படுகிறது என்று குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், மேற்கண்ட தீர்ப்பின் மீது தன்னுடைய விளக்கத்தினை சமர்ப்பிப்பதாகவும், வாடகைதாரர் காலி செய்ததை, வாரியத்திற்கு தாங்கள் தெரிவிக்கவில்லை என்ற கூற்று நியாயமானது எனவும், மேற்படி மின் இணைப்பில் மீட்டர் பழுதான விபரத்தை மின் நுகர்வோர்கள்

ஆன தனக்கு இது வரையிலும் தெரிவிக்கவில்லை மற்றும் மீட்டரை கழட்டி புதிய மீட்டர் வைத்த விபரமும் தனக்கு தெரிவிக்கவில்லை, மீட்டர் பழுதாகி மாற்றிய விபரம், நிலுவைத் தொகை ரூ.78,642/- ஐ செலுத்த அறிவிப்பு வழங்கிய பொழுது தனக்கு தெரிய வந்ததாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.5 மேற்படித் தொகை சம்பந்தமாக ஆட்சேபனை தெரிவித்து தொகையை தள்ளுபடி செய்ய உதவி மின் பொறியாளர் வெங்கமேடு அவர்களுக்கு மனு சமர்பித்து அந்த மனுவின் அடிப்படையில் உதவி மின் பொறியாளர் வெங்கமேடு அவர்கள் செயற்பொறியாளர்/இ.கா/நகரியம் / கரூர் அவர்களுக்கு தள்ளுபடி செய்ய கடிதம் வழங்கி அதன் அடிப்படையில் செயற்பொறியாளர்,கரூர் அவர்கள் நேரடி விசாரணை நடத்தியதாகவும், ஆனால் தொகையை தள்ளுபடி செய்யவில்லை எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.6 ஆடிட் அதிகாரி அவர்கள் அறிக்கையில் Consumer Ledger ஐ ஆய்வு செய்து அதன் அடிப்படையில் 03/2023 மாதத்தில் ரீடிங் குறைவாக பதிவான காரணத்தினால் மீட்டர் 03/2023 முதல் பழுது என்று கருதி சராசரி விதிக்கப்பட்டுள்ளதாகவும், MRT Report ஐ வைத்து கணக்கிடவில்லை எனவும், மீட்டர் 03/2023 முதல் பழுது என்று குறிப்பிட்டிருந்தால், ஏன் உதவி பொறியாளர் இ&கா வெங்கமேடு அவர்கள் தணிக்கை அலுவலர் ஆய்வுக்கு முன்பே சராசரி கணக்கீடு செய்து தொகையை கட்ட அறிவிப்பு வழங்கவில்லை என வினா எழும்புகிறது எனவும், மேலும் M.R.T. சோதனை அறிக்கையில் மீட்டர் பழுது என்று குறிப்பிட்டுள்ளது என்று தீர்ப்புரையில் குறிப்பிடபட்டுள்ளது 03/2023 முதல் என்று குறிப்பிடப்படவில்லை எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.7 எனவே கணக்கீடு எடுப்பவர் 03/2023 மாதத்தில் கணக்கு எடுக்கும் பொழுது மீட்டர் நல்ல நிலையில் இருந்திருக்கும் எனவும், மீட்டர் பழுதின் காரணமாக 05/2023 மற்றும் மீட்டர் மாற்றும் வரை (30/05/2023) உள்ள காலங்களுக்கு சராசரி தொகை செலுத்தப்பட்டு விட்டதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.8 எனவே 03/2023 மீட்டர் பழுது என்று அனுமானத்தின் பேரில் ஆடிட் அதிகாரி அவர்கள் விதித்த தொகையான ரூ.78,642/-ஐ தள்ளுபடி செய்யுமாறும் நிலுவைத்தொகையில் 4 ல் 1 பங்குத் தொகையை செலுத்த சம்மதிப்பதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

**6.0 <u>எதிர்மனுதாரரின் வாதங்கள்</u>:**

6.1 மனுதாரர் திரு.V.குப்புசாமி அவர்களின் மின் இணைப்பு எண்.06-004-003-1678 TF-Vயில் பொருத்தப்பட்டிருந்த மின் அளவி பழுது காரணமாக மாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும், இம்மின்னிணைப்பில் Indus Towers இயங்கி வந்துள்ளதாகவும், கரூர் மின்வாரிய தணிக்கை துறை அலுவலர்களால் 04/2022 முதல் 03/2023 வரை உள்ள காலங்களுக்கு மின் அளவி பழுது ஏற்பட்ட மின் இணைப்புகளை தணிக்கை செய்ததில் மனுதாரருடைய மின் இணைப்பும் தணிக்கை செய்யப்பட்டதாகவும், இதில் மனுதாரருடைய மின் அளவி 03/2023 மற்றும் 05/2023 மாதங்களில் மின் இணைப்பு பழுதடைந்துள்ளதாக தெரிய வந்தது எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.2 மேலும், மின் அளவி பழுதடைந்ததற்கான சோதனை அறிக்கை வேண்டி மின் அளவி MRT-க்கு அனுப்பப்பட்டதாகவும், சோதனையில் மின் அளவி பழுதடைந்துள்ளதாக ஆய்வறிக்கை பெறப்பட்டதாகவும், பழுதடைந்த மின் அளவிக்கு பதிலாக புதிய மின்அளவி 30.05.2023 அன்று மாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும், (TNERC Supply code clause 11(2))-ன்படி சராசரி மின்அளவாக 05/2022 மற்றும் 07/2022 மாதங்களில் பயன்படுத்திய மின்அளவுகளின் அடிப்படையில் சராசரி மின் அளவாக 10570 யூனிட்டிற்கு உரிய தொகை மின் அளவி பழுதடைந்த மாதங்களான 03/2023 மற்றும் 05/2023 மாதங்களுக்கு சராசரி மின்கட்டணம் விதிக்கப்பட்டிருக்க வேண்டும் எனவும், ஆனால் பிரிவு அலுவலகத்தில் 05/2023 மாதத்திற்கு மட்டுமே சராசரி மின்கட்டணத் தொகை ரூ.1,14,763/- விதிக்கப்பட்டு மனுதாரர் செலுத்தியுள்ளதாகவும், Indus Tower காலி செய்யப்பட்டு வேறு ஒரு மின் இணைப்பில் (004-003-3372) Indus Tower செயல்படுவதாக மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ளதாகவும், இருப்பினும் 05/2023 மாதத்திற்கு உரிய சராசரி மின் கட்டணத்தை (Defective Period) ரூ.1.14,763/-ஐ செலுத்தியுள்ளதால் 03/2023 மாதத்திற்குகான விடுபட்ட சராசரி மின்கட்டணத்

தொகையை வாரிய விதிமுறைப்படி தான் வாரிய தணிக்கைத் துறையினரால் விதிக்கப்பட்டுள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.3 வாடகைதாரர் காலி செய்ததை மனுதாரர் தெரிவிக்கவில்லை என்ற கூற்று நியாயமானதாக கருதுவதாக மனுதாரரே ஒப்புக்கொண்டுள்ளார் எனவும், மேற்கண்ட மின் இணைப்பில் மாதாந்திர கணக்கீடு எடுக்கும் போது (13.05.2023) கணக்கீட்டாளரால் பழுது கண்டுபிடிக்கப்பட்டு Defective Meter Register–20.05.2023 அன்று பதியப்பட்டு, பழுதான மீட்டர் 30.05.2023 அன்று மாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும், மேற்கண்ட இடத்தில் டவர் மட்டுமே இயங்கி வந்ததால் அவ்விடத்தில் பயனாளர் யாரும் இல்லாத நிலையில் பழுதடைந்த மீட்டர் மாற்றிய விபரம் மனுதாரரிடம் தெரிவிக்கப்படவில்லை எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.4 நிலுவைத் தொகை ரூ.78,642/– செலுத்த அறிவிப்பு (15.09.2023) வழங்கிய போது மீட்டர் பழுதாகி மாற்றிய விபரம் மனுதாரருக்கு உதவி மின் பொறியாளர்/ இகா/வெங்கமேடு அவர்கள் மூலம் தெரிவிக்கப்பட்டதாகவும், மேற்படி தொகை சம்பந்தமாக ஆட்சேபனை தெரிவித்து தொகையை தள்ளுபடி செய்ய மனுதாரர் உதவி மின் பொறியாளர்/ இகா/ வெங்கமேடு அவர்களுக்கு 04.11.2023 அன்று மனு சமர்ப்பித்துள்ளதாகவும், அம்மனுவானது 06.11.2023 அன்று இவ்வலுவலகத்தில் பெறப்பட்டதாகவும், மேலும் அம்மனுவானது மனுதாரரிடமிருந்து பெறப்பட்ட Agreement copy–யை வைத்து பரிந்துரை செய்யப்பட்டு 07.12.2023 அன்று தணிக்கை குழுவிற்கு அனுப்பப்பட்டதாகவும், மீண்டும் தணிக்கை குழுவிடமிருந்து 03/2023ற்கு விதிக்கப்பட்ட சராசரி கணக்கீடு வாரிய விதிகளின்படி சரியானது என்றும், தணிக்கை சீட்டிற்குண்டான தொகை ரூ.78,642/–யை வசூல் செய்ய நடவடிக்கை எடுக்குமாறு 18.12.2023 அன்று தெரிவிக்கப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.5 Consumer Ledger–யை ஆய்வு செய்து அதன் அடிப்படையில் 03/2023 மாதத்தில் Reading குறைவாக பதிவான காரணத்தினால் மீட்டர் 03/2023 பழுது என கருதி சராசரி விதிக்கப்பட்டிருந்தாலும், MRT ஆய்வறிக்கையிலும் மீட்டர் பழுது என்று குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், பழுதான மீட்டர் உதவி மின் பொறியாளர்/ இகா/ வெங்கமேடு அவர்களால் கணினியில் 30.05.2023 அன்று பதிவு செய்யப்பட்டு, MRT

அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும், 20.07.2023 அன்று MRT அலுவலகத்திலிருந்து மீட்டர் பழுது என்று அறிக்கை பெறப்பட்டுள்ளதாகவும், இதற்கிடையில் தணிக்கை குழுவினரால் தணிக்கை செய்யப்பட்டு ரூ.78,642/−யை வசூல் செய்யுமாறு தணிக்கைச்சீட்டு வழங்கப்பட்டுள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.6 எனவே மனுதாரர் குறிப்பிட்டுள்ளவாறு 03/2023 Indus Tower ஒப்பந்தத்தின்படி இடமாற்றம் செய்திருந்தால், மின் இணைப்பின் உரிமையாளர் பிரிவு அலுவலகத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டது குறித்து தெரிவித்திருந்தால், பிரிவு அலுவலரால் மின் இணைப்பு ஆய்வு செய்யப்பட்டு, Check reading போடப்பட்டிருக்கும் எனவும், எனவே எந்த ஒரு தகவலும் தெரிவிக்கப்படாததால் 05/2023 மாத மின் கணக்கீடு எடுக்கும்போது கணக்கீட்டாளரால் மின் அளவி பழுது என்று தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையில், மின்னளவி மாற்றப்பட்டுள்ளதாகவும், அதனை தொடர்ந்து 05/2023 மாதத்திற்கு சராசரி மின் கணக்கீடு செய்யப்பட்டு, ரூ.1,14,763/− வசூல் செய்யப்பட்டுள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.7 மேலும் நுகர்வோர் பேரேட்டின்படி 01/2022 முதல் ஒவ்வொரு கணக்கீட்டின் போதும், சுமார் 01 லட்சம் வரை மின் கணக்கீட்டு தொகையாக வசூல் செய்யப்பட்டுள்ளதாகவும், எனவே வாரிய விதிமுறைகளின்படியும், மீட்டர் பழுது என்று MRT ஆய்வறிக்கையின்படியும், 03/2023 மாத மின்கட்டணத்தில் தணிக்கைக் குழு தெரிவித்துள்ளதை போல ரூ.78,642/−வசூல் செய்ய வேண்டும் என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

**7.0 <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>:**

7.1 இருதரப்பு வாதங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

7.2 மேல்முறையீட்டாளர் தனது மின் இணைப்பில் மின்னளவி பழுதான விவரத்தை தனக்கு தெரிவிக்கவில்லை என்றும் பழுதான மின்னளவியை கழற்றி புதிய மின்னளவியை வைத்த விபரமும் தனக்கு தெரிவிக்கவில்லை எனவும், மின்னளவி

பழுதான காலத்திற்கான நிலுவைத் தொகை ரூ.78,642/-ஐ செலுத்த அறிவுப்பு வழங்கிய போது தான் தனக்கு தெரிய வந்ததாகவும், TNERC Supply Code clause 11(2)-இன்படி தணிக்கைத் துறையினரால் விதிக்கப்பட்ட சராசரி தொகை சரியானது என மின் நுகர்வோர் குறைதீர் மன்ற தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், ஆனால் இந்த கணக்கீட்டில் தவறுகள் உள்ளன என்றும் MRT அறிக்கையை கணக்கீட்டில் பயன்படுத்தாமல், வெறும் கணக்கீடு எடுப்பவரின் பதிவுகளின் அடிப்படையில் முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.3 தணிக்கை அதிகாரிகள் 03/2023 மாதத்தில் குறைவாக பதிவான ரீடிங்கின் அடிப்படையில் மீட்டர் பழுதடைந்ததாக கருதியுள்ளதாகவும், ஆனால், MRT அறிக்கையில் 03/2023 முதல் மீட்டர் பழுது என எங்கும் குறிப்பிடப்படவில்லை எனவும், 03/2023 மாதத்திற்கான கணக்கீடு எடுக்கும் போது மீட்டர் நல்ல நிலையில் இருந்திருக்க வாய்ப்பு உள்ளதாகவும், மீட்டர் பழுது காரணமாக 05/2023 முதல் 30/05/2023 வரை சராசரி தொகை விதிக்கப்பட்டதை அவர் ஏற்றுக் கொள்வதாகவும், எனவே தனது மின் இணைப்பு (06-004-003-1678 TF V) தொடர்பாக 03/2023 மாதத்திற்காக ரூ.78,642/- சராசரி கணக்கீட்டின் அடிப்படையில் விதிக்கப்பட்ட தொகையை தள்ளுபடி செய்ய வேண்டும் என விண்ணப்பித்துள்ளார்.

7.4 எதிர்மனுதாரர் தனது வாதுரையில் மனுதாரர் திரு. ஏ. குப்புசாமி அவர்களின் மின் இணைப்பு எண் 06-004-003-1678 TF V-இல் பொருத்தப்பட்டிருந்த மின் அளவி பழுதடைந்ததால், அதனை மாற்றியுள்ளதாகவும், இந்த மின் இணைப்பில் Indus Towers இயங்கி வந்ததாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார். கரூர் மின்வாரிய தணிக்கை துறையினரால் 04/2022 முதல் 03/2023 வரையிலான மின் அளவி பழுதடைந்த இணைப்புகளை ஆய்வு செய்தபோது, மனுதாரரின் மின் இணைப்பும் அதன் கீழ் வருவதாகவும், 03/2023 மற்றும் 05/2023 மாதங்களில் மீட்டர் பழுதாகி இருந்தது என கண்டறியப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.5 மின் அளவி பழுதடைந்ததற்கான உறுதிப்பாட்டை பெற MRT அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டதாகவும், அங்கு மேற்கொண்ட ஆய்வின் அடிப்படையில் மீட்டர் பழுதாகியிருப்பது உறுதி செய்யப்பட்டதாகவும், இதற்குப் பதிலாக 30.05.2023 அன்று

புதிய மீட்டர் பொருத்தப்பட்டதாகவும், TNERC Supply Code Clause 11(2)–இன்படி, 05/2022 மற்றும் 07/2022 மாதங்களில் பயன்படுத்திய மின் அளவின் அடிப்படையில் சராசரி கணக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும், 05/2023 மாதத்திற்காக மட்டுமே ரூ.1,14,763/– விதிக்கப்பட்டு மனுதாரர் செலுத்திய நிலையில், 03/2023 மாதத்திற்கான சராசரி கணக்கீடு செய்வதற்கான தேவையை மின்வாரிய விதிமுறையின் அடிப்படையில் தணிக்கை துறை அமல்படுத்தியதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.6 மனுதாரர் வாடகைதாரர் காலி செய்ததை அதிகாரிகளுக்கு தெரிவிக்கவில்லை என்பது உண்மையானதாகவே கருதப்படுவதாகவும், 13.05.2023 அன்று கணக்கீட்டின் போது மீட்டர் பழுதடைந்தது கண்டறியப்பட்டு, Defective Meter Register–இல் 20.05.2023 அன்று பதிவு செய்யப்பட்டதாகவும், 30.05.2023 அன்று பழுதான மீட்டர் மாற்றப்பட்டதாகவும், மேற்கண்ட இடத்தில் Tower மட்டுமே செயல்பட்டு வந்ததால், பயனாளரிடம் இது குறித்து தகவல் தெரிவிக்கப்படவில்லை எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.7 மனுதாரர் கூறியபடி 03/2023 மாதத்திலேயே Indus Towers ஒப்பந்தப்படி இடமாற்றம் செய்திருந்தால், உரிமையாளர் பிரிவு அலுவலகத்துக்கு தகவல் அளித்திருக்க வேண்டும். ஆனால் எந்த தகவலும் கிடைக்காததால், 05/2023 மாத கணக்கீட்டின் போது கணக்கீட்டாளர் மீட்டர் பழுது ஏற்பட்டதாக கண்டறிந்ததாகவும், அதனடிப்படையில் மீட்டர் மாற்றப்பட்டு 05/2023 மாதத்திற்கான சராசரி மின்கட்டணம் ரூ.1,14,763/– வசூலிக்கப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.8 நுகர்வோர் கணக்கீட்டின்படி 01/2022 முதல் ஒவ்வொரு மாதமும் சுமார் ஒரு லட்சம் ரூபாய் வரை மின்கட்டணம் வசூலிக்கப்பட்டதாகவும், வாரிய விதிமுறைகள் மற்றும் MRT ஆய்வறிக்கையின் அடிப்படையில், 03/2023 மாதத்திற்கான சராசரி கணக்கீடு முறையானதுதான் என்றும், எனவே ரூ.78,642/– வசூலிக்கப்பட வேண்டும் என்றும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.9 மேல்முறையீட்டாளரின் மின்இணைப்பில் இருந்த மின்அளவியின் நிலை குறித்து அறிய நான் Evidence Act, 1872 section 35 விதியை ஆராய விரும்புகிறேன். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"35. Relevancy of entry in public record or an electronic record made in performance of duty. An entry in any public or other official book, register or record or an electronic record stating a fact in issue or relevant fact and made by a public servant in the discharge of his official duty or by any other person in performance of a duty specially enjoined by law of the country in which such book, register or record or an electronic record is kept is a relevant fact."*

7.10 மேற்கூறிய சான்று சட்டத்தின் படி எந்தவொரு அரசாங்க பதிவும் நாட்டின் சட்டத்தின் கீழ் சாட்சியாகும் என தெரியவருகிறது. உரிமதாரரின் MRT பிரிவுக்கு அறிவியல் சோதனை நடத்திய பிறகு மீட்டரின் நிலையைத் தீர்மானிக்க அங்கீகரிக்கப்பட்டுள்ளது. எனவே, MRT அறிக்கையின் படி மின்னளவி பழுதடைந்தது என்பது தெளிவாகிறது. மின்னளவி சோதனை கூடத்தின் அறிக்கையின்படி மின்னளவி எப்பொழுது பழுதானது என்ற விவரம் தெரிவிக்கப்படவில்லை. ஆனால், நுகர்வோர் பேரேட்டின்படி 5/2023 மாதத்திற்கான கணக்கீட்டின் போது அதாவது 13.05.2023 அன்றுதான் மின்னளவி பழுது என பதிவு செய்யப்பட்டுள்ளது.

7.11 மேலும், மேல்முறையீட்டாளர் தெரிவித்த விவரங்களின்படி வாடகைதாரரான Indus Tower–ரிடம் போடப்பட்ட ஒப்பந்தத்தின்படி 03/2023–இல் இடமாற்றம் செய்த நிலையில், அந்த இடமாற்றம் செய்த தகவலை மேல்முறையீட்டாளர் எதிர்மனுதாரருக்கு தெரிவிக்காத காரணத்தினால் 03/2023 மாதத்திற்கும் சராசரி கணக்கீடு செய்யப்பட்டது தெரியவருகிறது.

7.12 ஆனால் நுகர்வோர் பேரேட்டின்படி 03/2023 மாத கணக்கீடு 01/2023 மாதத்தின் இறுதி கணக்கீடுக்கான 270780–ற்கும் 03/2023 மாதத்தில் கணக்கீடு செய்யும் போது 273840 என பதிவு செய்யப்பட்ட நிலையில் அந்த வித்தியாசத்திற்கான அலகு (273840 – 270780 = 3060) என்று பதிவு செய்யப்பட்டு அதன் அடிப்படையில் வசூல் செய்ததும் தெரிய வருகிறது. ஆகவே, இடமாற்றம் செய்த நிலையில் அந்த காலகட்டத்தில் உபயோகிப்பாளர் இல்லாததனால் மின்நுகர்வு குறைந்திருக்க வாய்ப்பு இருப்பதாக அறிய முடிகிறது. மேலும், நுகர்வோர் பேரேட்டின்படி 03/2023 மாத கணக்கீட்டின் போது மின்னளவி 'NORMAL' என்றுதான் பதிவு செய்யப்பட்டுள்ளது அதாவது 09.03.2023 வரை மின்னளவி நல்ல நிலையில் இருந்தது தெரிய வருகிறது.

7.13 மேற்கண்ட பத்திகளில் உள்ள தீர்வுகளின்படி மின்னளவி 09.03.2023 வரை நல்ல நிலையில் இருந்தது என்பதும், அதற்கு முன்புள்ள காலஅளவு மின்னளவி பழுது என்று MRT–யின் ஆய்வு அறிக்கை இல்லாத நிலையில் மின்னளவியானது 09.03.2023 காலகட்டத்திற்கு பிறகு தான் பழுதாகியிருக்கும் என்பதால் 03/2023 மாத கணக்கீட்டு காலமும் மின்னளவி பழுது என எதிர்மனுதாரர் வாதிடுவது சரியான நிலைபாடாக இல்லாததால் அக்காலகட்டத்திற்கு மின்னளவி பழுது என்று சராசரியின் அடிப்படையில் கேட்கப்பட்ட தொகை ரூ.78,642/– தள்ளுபடி செய்யப்படுகிறது. மேலும் மேல்முறையீட்டுக்காக மேல்முறையீட்டாளர் செலுத்திய 25% தொகையை தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய விதிப்படி நேர் செய்ய உத்தரவிடப்படுகிறது.

**8.0 <u>முடிவுரை:</u>**

8.1 மேற்கூறிய கண்டுபிடிப்புகளின் அடிப்படையில் மேல்முறையீட்டாளரின் மின் இணைப்பில் இருந்த மின்னளவி பழுது காலம் 03/2023 மாத கணக்கீட்டு காலமும் என எதிர்மனுதாரர் வாதிடுவது சரியான நிலைபாடாக இல்லாததால் அக்காலகட்டத்திற்கு மின்னளவி பழுது என்று சராசரியின் அடிப்படையில் கேட்கப்பட்ட தொகை ரூ.78,642/– தள்ளுபடி செய்யப்படுகிறது. மேலும் மேல்முறையீட்டுக்காக மேல்முறையீட்டாளர் செலுத்திய 25% தொகையை நேர் செய்ய உத்தரவிடப்படுகிறது.

8.2 மேற்கண்ட முடிவுடன் மேல்முறையீட்டு மனு எண் 14/2025 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ந. கண்ணன்)**
மின்குறைதீர்ப்பாளர்

''நுகர்வோர் இல்லையேல், நிறுவனம் இல்லை''
**"No Consumer, No Utility"**

<u>பெறுநர்</u>:

1. திரு V. குப்புசாமி, – By RPAD
செங்குந்த நகர் முதல் கிராஸ்,
கொங்குநகர், வெங்கமேடு,
மண்மங்கலம் வட்டம், கரூர்.

2. செயற்பொறியாளர்/ இ.கா/ நகரியம்/கரூர்,
கரூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் லிமிடெட்,
TNEB வளாகம், 3, கோவை ரோடு, கரூர் – 639002.

3. உதவி செயற்பொறியாளர்/ வடக்கு/கரூர்,
கரூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் லிமிடெட்,
SIDCO தொழிற்பேட்டை, மண்மங்கலம், கரூர் – 639 006.

4. உதவி மின்பொறியாளர்/ இ.கா /வெங்கமேடு,
கரூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் லிமிடெட்,
50 அடி சாலை, வெங்கமேடு, கரூர் – 639 006.

5. மேற்பார்வை பொறியாளர், – By email
கரூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் லிமிடெட்,
எண்.3, கோவை ரோடு, கரூர் – 639 002.

6. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By email
தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் லிமிடெட்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

7. செயலாளர், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், – By email
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

8. உதவி இயக்குநர் (கணினி) – <u>தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக</u>
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.